දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister — 2784832, Fax: 2784825

ලේකම් / செயலாளர் / Secretary — 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office — 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ–மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

Localiz Tamil Mediu

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
'இசுருபாய'
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

ඔබේ අංකය / உமது இல. / Your No. ..................

මගේ අංකය / எமது இல. / My No. ED/01/26/18/06/01

දිනය / திகதி / Date 2009.06.01

சுற்றுநிருப இலக்கம்- 2009/19

அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள்
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
அனைத்து கல்வி வலயப் பணிப்பாளர்கள்
அனைத்து கல்வியியற் கல்லூரி தலைவர்கள்
அனைத்து ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர்கள்
அனைத்து அதிபர்கள்

## தேசிய மட்ட பாடசாலை தகவல், தொடர்பாடல் தொழினுட்ப திறமைகாண் போட்டி

மேதகு ஜனாதிபதியினால் 2009ம் ஆண்டு தகவல் தொழினுட்பம் மற்றும் ஆங்கில மொழி வருடமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இதனை அடிப்படையாகக் கொண்டு கல்வி அமைச்சின் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பிரிவினால் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடத்தினை பிரபலப்படுத்தவும் ஆசிரியர்களின் மாணவர்களின் திறமைகளை மேம்படுத்தவும் இந்த ஆண்டு முதல் எதிர்வரும் ஒவ்வொரு ஆண்டிலும் இப்போட்டி நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த போட்டி தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடம் சம்பந்தமாக கல்வி அமைச்சின் தகவல் தொலைத்தொடர்பு தொழினுட்ப பிரிவினரால் வருடாந்தம் நடத்தப்படும் உத்தியோகபூர்வ போட்டியாக அமைவதுடன் இலங்கை கணினி மென்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கம் (SLASI) மற்றும் இலங்கை கணினி சமூகம் (CSSL) என்பவற்றினால் இது வரை முன்னெடுக்கப்பட்ட போட்டிகள் இனி இத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் என்பது விசேட அம்சமாகும்.

2009ம் ஆண்டு இப்போட்டி தெரிவு செய்யப்பட்ட சில தலைப்புகளின் கீழ் நடைபெறும். எதிர்வரும் ஆண்டுகளில் இத் தலைப்புகள் தேவை கருதி மாற்றப்படலாம். அரசாங்கப் பாடசாலைகள் மற்றும் அரசாங்க அனுமதிப் பெற்ற தனியார் பாடசா்லைகளின் ஆசிரியர்கள் 6ம் தரம் முதல் 13ம் தரம் வரை கல்வி கற்கும் மாணவ மாணவியர்கள், கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள் (Prospective Teachers) இந்த போட்டிக்கான படைப்புகளை முன்வைக்க முடியும். அனைத்து படைப்புகளும் சுயமானதாக இருக்க வேண்டும். வழங்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டதாக இருக்க வேண்டும். படைப்புகள் தலைப்புகளுடன் பொருந்தக் கூடியதாகவிருக்க வேண்டும். சமூகத்திற்கு தவறான கருத்துக்களை தரும் படைப்புகள் நிராகரிக்கப்படும்.

**A) இந்த போட்டி மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கும்**

**(A.1) மாணவர்களுக்கான இளம் கணினி விஞ்ஞானிகள் போட்டி** (YCS)

இது மென்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்தினால் (SLASI) நடத்தப்படும்.

**(A.2) மாணவர்களுக்கான தேசிய மட்ட பாடசாலை மென்பொருள் போட்டி (NSSC)**

இலங்கை கணினி சமூகத்தினால் (CSSL) நடத்தப்படும்.

**(A.3) ஆசிரியர்கள் / முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான (Prospective Teachers) "படைப்புத்திறன் மிக்க ஆசிரியர்கள்"**

இந்த போட்டி கல்வி அமைச்சினால் நடத்தப்படும்.

**(A.1) இளம் கணினி விஞ்ஞானி போட்டி (YCS)** - இலங்கை மென்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்தினால் (SLASI) நடத்தப்படும்.

இரு பிரிவுகளைக் கொண்ட மாணவர்களுக்கு இரு வேறுப்பட்ட வகையில் போட்டிகள் நடத்தப்படும். முதல் பகுதி 6ம் தரம் முதல் 11 தரம் வரையிலான மாணவர்களுக்கும், இரண்டாவது பகுதி தரம் 12 முதல் 13 வரையிலான மாணவர்களுக்கும் நடத்தப்படுவதோடு கீழ்வரும் விதத்தில் போட்டிகள் நடத்தப்படும்.

| மாணவர் பிரிவு | போட்டி நிலை | தலைப்பு |
|---|---|---|
| பிரிவு - 1<br>கனிஷ்ட பிரிவு (Junio Students) தரம் 1-11 வரை | முப்பரிமாண படைப்பு **(Computer Graphic Presentation)** | 3D Studiomat, Maya ஆகிய (இந்த மென்பொருட்களுக்கு மட்டுமே வரையறுக்கப்படவில்லை) மென்பொருள் பாவனையால் |

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1ம் திகதியன்று 1( வயதுக்குட்பட்ட மாணவர்கள் ஆனால் 17 வயதுக்கு மேற்படாதவர்கள் இதில் பங்குபற்ற முடியும். | | மேற்கொள்ளப்படும் படைப்புக்கள். முப்பரிமாண பிரயோக முறையும் உள்ளடக்கம். |
| | **கணினி வேலைத்திட்டங்கள் (Computer Applications)** | Pascal, Visual Basic அல்லது Java (இந்த தலைப்புக்களுக்கு மட்டும் வரையறுக்கப்படவில்லை) போன்ற கணினி மொழி மற்றும் தரவுகளை கொண்டு மேம்படுத்தப்பட்ட இணையத்தளம் மற்றும் கணினி வேலைத்திட்டங்கள் உள்ளடக்கம் |
| | கணினி விளையாட்டு விண்ணப்பங்கள் **(Computer Gaming Application)** | கணினி விளையாட்டு முறையை அடியொட்டிய படைப்புக்களைக் கொண்டிருத்தல். |
| | கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் தொடர்பான படைப்புக்கள் **(Embedded Systems)** | கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் ஆகிய இரண்டையும் அடியொட்டி படைக்கப்படும் படைப்புக்கள் அடங்கும். |
| பிரிவு - 2<br>சிரேஷ்ட மாணவ்கள் (Senic Student) ஒவ்வொரு ஆண்டுப் ஜனவரி 1ம் திகதி அன்று 1 வயதுக்குட்பட்ட மாணவர்கள் ஆனால் 20 வயதுக்கு மேற்படாதவர்கள் இதில் பங்குபற்ற முடியும். | பொது திட்டங்கள் **(General Applications)** | இணையம்/கைப்பேசி கணினி தொழில்நுட்பம் போன்ற பாவனை முறைகளை பயன்படுத்திக் கொண்டு முன்வைக்கப்படும் புதிய மென்பொருள் படைப்புக்கள் அடங்கும். |
| | கணினி மென்பொருள், வன்பொருள் தொடர்பான படைப்புக்கள் **(Embedded Systems)** | கணினி வன்பொருள், மென்பொருள் இரண்டையும் உள்ளடக்கிய படைப்புக்கள் அடங்கும். |

| | | |
|---|---|---|
| | ரொபோ தொழில்நுட்பம் **(Robotics)** சலன காட்சிகளை அடிப்படையாகக் கொண்ட படைப்புக்கள் **(Vision Based Applications)** | வெப் கெமரா மற்றும் ரொபோ இணைந்த கணினி வன்பொருள், மென்பொருளை பயன்படுத்தி படைக்கப்பட்ட கணினி வேலைத்திட்டங்கள் உள்ளடங்கியது. கணினித் துறையிலான புதிய கண்டு பிடிப்புக்கள் மற்றும் புதிய படைப்புக்கள். (தேர்வுக்குழுவின் மேற்பார்வையின் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படும்) |

(**A**.2) தேசிய மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான மென்பொருள் போட்டி **(NSSC)**
- இலங்கை கணினி சங்கத்தினால் நடத்தப்படும். (CSSL).

இப்போட்டி மாணவர்களின் வயது தரத்திற்கு ஏற்ப மூன்று பகுதிகளாக பின்வருமாறு நடத்தப்படும்.

1. குழு 1:- குறிப்பிட்ட ஆண்டின் ஜனவரி 1ம் திகதியில் 15 வயதிற்குட்பட்ட மாணவர்கள்.
2. குழு 2:- குறிப்பிட்ட ஆண்டின் ஜனவரி 1ம் திகதியில் 15 வயதான 17 வயதிற்கு மேற்படாத மாணவர்கள்.
3. குழு 3:- குறிப்பிட்ட ஆண்டின் ஜனவரி 1ம் திகதியில் 17 வயதான ஆனால் 19 வயதிற்கு மேற்படாத மாணவர்கள்.

| | | |
|---|---|---|
| | உள்ளக செயற்பாட்டு இலத்திரனியல் பயிற்சி மற்றும் பயிற்றுவிப்பு **Interactive Electronic Learning & Teaching tool.** | பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமைவான பாடமொன்றிற்கு சம்பந்தமான இலத்திரனியல் கல்வி கற்றல்/கற்பித்தல; வடிவமைத்தல் (10 நிமிடங்களுக்குள் அடங்கல் வேண்டும்) |

(**A.3.2**) கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான 'படைப்புத்திறன்' போட்டி

| பிரிவு | போட்டி | தலைப்பு |
|---|---|---|
| திறந்த போட்டி | உள்ளக செயற்பாட்டு இலத்திரனியல் பயிற்சி மற்றும் பயிற்றுவிப்பு கருவி **Interactive Electronic Learning & Teaching tool.** | பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமைவான பாடமொன்றிற்காக உள்ளக செயற்பாட்டு இலத்திரனியல் பயிற்சிகள் பயிற்றுவிப்பு கருவியை வடிவமைத்தல். (10 நிமிடங்களுக்கு வரையறுக்கப்பட வேண்டும்.) |

**B)** போட்டிகளுக்கான நிபந்தனைகள்

| | | |
|---|---|---|
| இளம் கணினி விஞ்ஞானி (YCS) இலங்கை மென்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்தினால் (SLASI) நடத்தப்படும் போட்டி. | தேசிய மட்டப் பாடசாலை மாணவர்களுக்கான மென் பொருள் போட்டி (NSSC) **CSSL** இலங்கை கணினி சங்கத்தினால் நடத்தப்படும். | ஆசிரியர்கள், முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான **(Prospective Teachers)** 'படைப்புத்திறன்' போட்டி - கல்வி அமைச்சினால் நடத்தப்படும் |
| படைப்புகள் தனியாளுடையதாகவும். சுயமானதாகவும் இருக்க வேண்டும். மூலப்பிரதியாக அமைய வேண்டும். | ஒரு பாடசாலையில் இருந்து ஒன்று முதல் மூன்று மாணவர்களைக் கொண்ட குழுக்களை அனுப்ப முடியும். | படைப்புகள் தனியாளுடையதாகவும் சுயமானதாகவும். இருக்க வேண்டும். மூலப்பிரதியாக அமைய வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இவர்களை மூன்று நிலைப்போட்டிகளுக்கும் அனுப்ப முடியும். | |
| படைப்புகள் ஆங்கில மொழியில் அல்லது தாய்மொழியில் அமையலாம். | அவசியமற்றது | படைப்புகள் ஆங்கில மொழியில் அல்லது தாய்மொழியில் அமையலாம். |
| தலைப்புக்கு பொருந்தும் வகையில் படைப்பு அமைய வேண்டும். வழங்கப்படும் செய்தி பாடசாலை மட்டத்திற்கு உகந்ததாக அமைய வேண்டும். | அவசியமற்றது | தலைப்புக்கு பொருந்தும் வகையில் படைப்பு அமைய வேண்டும். வழங்கப்படும் செய்தி பாடசாலை மட்டத்திற்கு உகந்ததாக அமைய வேண்டும். |
| போட்டியாளரினால் ஒரு படைப்பு மட்டுமே முன்வைக்கப்படலாம் | அவசியமற்றது | போட்டியாளரினால் ஒரு படைப்பு மட்டுமே முன்வைக்கப்படலாம் |
| அவசியமற்றது | போட்டியாளர்கள் C/C++ அல்லது VB.NET அல்லது Java ஆகியனவற்றில் அடிப்படை அறிவை கொண்டிருத்தல் வேண்டும். | அவசியமற்றது |
| அவசியமற்றது | வினாக்கள் வழங்கப்பட்டு இரண்டு மணித்தியாலங்களுக்குள் விடைகள் அளிக்கப்பட வேண்டும். | அவசியமற்றது |
| போட்டிக்கு பதிவுசெய்தல், படைப்புகளை சமர்பித்தல் என்பன நிபந்தனை **C** இல் குறிப்பிட்டுள்ளமைக்கமைய | போட்டிக்கு பதிவுசெய்தல் நிபந்தனை **C** இல் குறிப்பிட்டுள்ளமைக்கமைய காணப்பட வேண்டும். | போட்டிக்கு பதிவுசெய்தல், படைப்புகளை சமர்பித்தல் என்பன நிபந்தனை **C** இல் குறிப்பிட்டுள்ளமைக்கமைய |

| | | |
|---|---|---|
| காணப்பட வேண்டும். | | காணப்பட வேண்டும். |
| படைப்புகள் அவ்வவ் போட்டி நிபந்தனைக்கு உட்பட்டவையாக அமைய வேண்டும். இறுதி சமர்ப்பிப்பு படைப்பு இரு மென்பொருள் பிரதிகளைக் கொண்டிருக்க வேண்டும் (சீ.டி.க்களில்) படைப்புடன் அதனை இயக்குவதற்கான மென்பொருள் (Software) ஆலோசனைகளும் அனுப்பப்படல் வேண்டும். விசேடமான மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருப்பின் அதனை வழங்க வேண்டும். | போட்டியாளர்கள் முன்வைக்கின்ற தீர்வுகள் தொடர்பான படைப்புகள் அனைத்தும் பின்சேமிப்பு (Backup) முறையில் பதிவுசெய்து வைத்திருத்தல் வேண்டும். | படைப்புகள் அவ்வவ்போட்டிகளுக்குரிய நிபந்தனைக்குட்பட்டவையாக அமைய வேண்டும். இறுதி சமர்ப்பிப்பு படைப்பு இரு மென்பொருள் பிரதிகளைக் கொண்டிருக்க வேண்டும் (சீ.டி.க்களில்). படைப்புடன் அதனை இயக்குவதற்கான மென்பொருள் ஆலோசனைகளும் அனுப்பப்படல் வேண்டும். விசேடமான மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருப்பின் அதனை வழங்க வேண்டும். |
| அவசியமற்றது | போட்டியாளர்களுக்கு உணவு, தண்ணீர் புத்தகங்கள் அல்லது இலத்திரனியல் உபகரணங்கள் எவையும் பயன்படுத்த அனுமதி கிடையாது. குறிப்புகள் குறிப்பதற்காக மட்டும் தாள்கள் வழங்கப்படும் | அவசியமற்றது |

| மேலதிக விபரங்களுக்கு- | மேலதிக விபரங்களுக்கு | மேலதிக விபரங்களுக்கு |
|---|---|---|
| செயலாளர் SLASL, இல.51, சேர்- மார்க்கஸ் பெர்னான்டோ மாவத்தை, கொழும்பு07.<br>தொ.பேசி – 011 2665261,<br>011 4713822<br>ஃபெக்ஸ் - 011 4713821<br>மின்னஞ்சல் :<br>slasi@infotel.lk<br>இணையத்தளம் :<br>www.slasi.com | இலங்கை கணினி சங்கம் (CCL),<br>275/75, ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு-07.<br>தொ.பே - 0112 592762<br>ஃபெக்ஸ - 0112 508009<br>மின்னஞ்சல் :<br>info@cssl.lk<br>இணையத்தளம் :<br>www.cssl.lk | பணிப்பாளர்,<br>தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கிளை, கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல.<br>தொ.பே – 011 2785821<br>ஃபெக்ஸ் - 011 2785821<br>மின்னஞ்சல் :<br>ictchamps@gmail.com<br>இணையத்தளம் :<br>www.schoolnet.lk |
| நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது | | |

**C)** அனைத்து போட்டிகளுக்குமான படைப்புகளை சமா்ப்பித்தல், பதிவு செய்தல் விபரங்கள்

| (C.1) இளம் கணினி விஞ்ஞானி போட்டி (YCS) - இலங்கை மென்பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்தினால் (SLASI) நடத்தப்படும். | |
|---|---|
| போட்டிகளுக்கான பதிவுகள் | படைப்புகளை ஒப்படைத்தல் |
| ஒவ்வொரு வருடமும் ஜுலை 17 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு உங்களுக்குரிய பிரிவிற்கு சம்பந்தமான "REGISTRATION-YCS(Group I)" விண்ணப்பப் பத்திரத்தையோ, "REGISTRATION-YCS (Group II)" விண்ணப்பத்திரத்தையோ நிரப்பி | ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் 30 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு முழுமைப்படுத்தப்பட்ட படைப்புக்களை சீ.டியில் மட்டும் உள்ளடக்கக்கூடிய மென்பொருள் பிரதிகளுடன் உங்களுக்கு உரிய பிரிவிற்கேற்ப "ENTRY SUBMISSION FORM-YCS (Group I)" அல்லது "ENTRY |

| | |
|---|---|
| பாடசாலை அதிபரின் அத்தாட்சியுடன் பதிவுத் தபாலில் கீழ்காணும் (D) முகவரிக்கு அனுப்பவும். | SUBMISISON FORM-YCS (Group II)" என்ற விண்ணப்பத்தை நிரப்பி பாடசாலை அதிபரின் அத்தாட்சியுடன் பதிவுத்தபாலில் கீழே (D) உள்ள முகவரிக்கு அனுப்பவும். |
| நீங்கள் அனுப்புகின்ற விண்ணப்ப கடித உறையின் இடது மூலையில் YCS (Group I) அல்லது YCS (Group II) ஆகியதில் உங்களுக்கு பொருத்தமானதை குறிப்பிட்டு பாடசாலை பெயருடன் அனுப்பி வைக்கவும். | |
| **(C.2)** தேசிய மட்ட பாடசாலை மாணவர்களுக்கான மென்பொருள் போட்டி **(NSSC)** - இலங்கை கணிணி சங்கத்தினால் நடத்தப்படும். (CSSL). | |

| போட்டிகளுக்கான பதிவுகள் | படைப்புக்களை முன்வைத்தல் |
|---|---|
| ஓவ்வொரு வருடமும் ஜுலை 17 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு உங்களுக்கு உரிய பிரிவின்படி, "REGISTRATION - CSSL (Group 1)" விண்ணப்பத்தையோ, "REGISTRATION _ CSSL (Group 2)" விண்ணப்பத்தையோ, "REGISTRATION - CSSL (Group 3)" விண்ணப்பத்தையோ பாடசாலை அதிபரின் அத்தாட்சியுடன் பதிவுத்தபாலில் கீழுள்ள (D) முகவரிக்கு அனுப்பவும். | அவசியமற்றது |
| நீங்கள் அனுப்புகின்ற தபால் உறையின் இடதுபக்க மேல் முனையில் CSSL (Group 1) அல்லது CSSL (Group 2) அல்லது CSSL (Group 3) ஆகியவற்றில் உங்களுக்கு | அவசியமற்றது |

| | |
|---|---|
| உரிய பிரிவை குறிப்பிட்டு பதிவுத்தபாலில் கீழ் (Dயில்) குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பலாம். | |

(C.3) ஆசிரியர்கள், முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான **(Prospective Teachers)** 'படைப்புத்திறன் மிகு ஆசிரியர்' போட்டி

இந்த போட்டி கல்வி அமைச்சினால் நடத்தப்படுகின்றது.

| போட்டிகளுக்கான பதிவுகள் | படைப்புக்களை அனுப்பிவைத்தல் |
|---|---|
| ஒவ்வொரு வருடமும் ஜுலை 17 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "REGISTRATION-TEACHERS(T)" விண்ணப்பத்தையோ "REGISTRATION-TEACHERS(T/T)" விண்ணப்பத்தையோ நிரப்பி பாடசாலை அதிபரதோ, பீடாதிபதியினதோ அத்தாட்சியுடன் கீழ்காணும் (Dயில்) முகவரிக்கு தபாலிடவும். | ஓவ்வொரு வருடமும் ஒகஸ்ட் 30 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு முழுமைப்படுத்தப்பட்ட படைப்புக்களை சீ.டி.க்களில் மட்டும் அடக்கப்பட்ட மென்பொருள் பிரதிகள் இரண்டுடன் உங்களுக்குரிய பிரிவின்படி "ENTRY SUBMISISON FORM-TEACHERS (T)" விண்ணப்பத்தையோ "ENTRY SUBMISISON FORM-TEACHERS (T/T)" நிரப்பி பாடசாலை அதிபர் அல்லது பீடாதிபதியின் அத்தாட்சியுடன் பதிவுத்தபாலில் கீழ் (Dயில்) காணும் முவரிக்கு அனுப்பலாம். |
| நீங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல்முனையில் TEACHERS (T) அல்லது TEACHERS (T/T) என்ற உங்களுக்குரிய பிரிவை குறிப்பிட்டு பாடசாலை பெயருடன் அனுப்பவும். | |

D) அனைத்து போட்டிகளுக்குமான பதிவைப் பெறவும், படைப்புக்களை அனுப்பவும் கீழ்காணும் முகவரியை நாடவும்.

பணிப்பாளர்,
தகவல் தொழில்நுட்ப கிளை,
கல்வி அமைச்சு,
இசுறுபாய,
பத்தரமுல்ல.

E) பொதுவான தகவல்கள்

வருடாந்தம் இப்போட்டி பின்வரும் காலப்பகுதிகளில் நடைபெறும்.

1. பாடசாலைகளுக்கான அறிவுறுத்தல்களை வழங்கல் - ஒவ்வொரு வருடமும் ஜுன் மாதம் வரையில்.
2. மதிப்பீடு - இலங்கை கணினி சங்கத்தினால் (CSSL) நடத்தப்படுகின்ற தேசிய மட்டத்திலான பாடசாலைகள் கணினி மென்பொருள் (NSSC) போட்டிகளை இலங்கை கணினி சங்கம் வழிநடத்தும்; இலங்கை கணினி மென்பொருள் வடிவமைப்பாளர்களின் சங்கத்தினால் நடத்தப்படும் இளையோர் கணினி வல்லுனர்களின் போட்டிகள் (YCS) மற்றும் கல்வி அமைச்சினால் நடத்தப்படும் ஆசிரியர்கள் மற்றும் பயிலுநர் ஆசிரியர்களுக்கான போட்டிகள் கொழும்பு பல்கலைக்கழக கணினிக்கற்கைப் பிரிவினால் வழிநடத்தப்படும்.
3. தேசிய மட்டத்திலான போட்டிக்கு முன்பதாக மாகாண மட்டத்திலான போட்டிகளுக்குரிய சான்றிதழ்கள் வழங்கப்படும்.
4. தேசிய மட்டத்திலான போட்டிகளுக்குரிய சான்றிதழ்கள் வழங்கல் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்திற்குள் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் ஆசிரியர்கள், பயிலுநர் ஆசிரியர்களை பங்குபற்றச் செய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தயவாய் கேட்டுக்கொள்கின்றேன்.

எம்.எம்.என்.டி.பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு,
இசுறுபாய,
பத்தரமுல்ல.